**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண். 583/2020 இ.ம.எண்.
எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.ஜானகி, பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சம்பத் | ஜாதி | : | |
| த/பெ | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 25.12.2019ம் தேதியிட்ட கடனுறுதி சீட்டின் அசல் **வா.சா.ஆ.1.** (மேற்படி கடனுறுதி சீட்டு சட்டப்படி சரியான பிரதிபிரையோஜனத்துக்கு ஏற்பட்டதல்ல என்று பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்யப்பட்டதால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 17.06.2020ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.2.** மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதற்கான ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.3.** 20.07.2020ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.